# ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,

ஆவின் கால்நடைத்தீவன தொழிற்சாலை, சென்னிமலை சாலை ஈரோடு 638 001

தொலைபேசி எண்: 8883600102 e.mail: eroaavin.cfp@gmail.com

இரண்டு வருட காலத்திற்கு கால்நடைத்தீவன மூட்டைகளை தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட இடங்களுக்கு சொந்த/ வாடகை வாகனங்கள் மூலம் கொண்டு சென்று ஒப்படைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்.

## தொழில்நுட்ப படிவம்– I

## விண்ணப்ப படிவம்

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்ததாரரின் பெயர் (பெரிய எழுத்துகளில்) | |
| 2 | ஒப்பந்ததாரரின் நிரந்தர முகவரி | |
| 3 | ஒப்பந்ததாரரின் அஞ்சல் முகவரி | |
| 4 | தொலைபேசி எண் : | |
| 5 | நிரந்தர கணக்கு எண் : (PAN) | |
| 6 | முன்வைப்புத் தொகை செலுத்தியதற்கான விபரம் (EMD) | |
| 7. | முக்கிய குறிப்புகள் ஏதேனும் இருப்பின் | |

## உறுதி மொழி

என்னால் / எங்களால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி கூறுகிறேன் / கூறுகிறோம் ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் / நடப்போம் என்று உறுதி கூறுகிறேன் / கூறுகிறோம். மேற்கண்ட ஒப்பந்தமானது உத்தரவு நாள் முதல் இரண்டு வருட காலத்திற்கு ஆகும். இவ்வொப்பந்தம் உறுதி செய்யப்படும் பட்சத்தில் ரூ.100/- விலை மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தத்தை ஒன்றியத்துடன் ஏற்படுத்திக் கொள்ள முழு சம்மதத்தை தெரிவித்துக்கொள்கிறேன் / கொள்கிறோம்.

விண்ணப்பதாரர் கையொப்பம்

இடம்:

நாள் :

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,
ஆவின் கால்நடைத்தீவன தொழிற்சாலை, சென்னிமலை சாலை ஈரோடு 638 001
தொலைபேசி எண்: 8883600102 e.mail: eroaavin.cfp@gmail.com

---

இரண்டு வருட காலத்திற்கு கால்நடைத்தீவன மூட்டைகளை தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட இடங்களுக்கு சொந்த/ வாடகை வாகனங்கள் மூலம் கொண்டு சென்று ஒப்படைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்.

## வணிகபடிவம் – II
## விண்ணப்ப படிவம்

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்ததாரரின் பெயர் (பெரிய எழுத்துகளில்) | |
| 2 | ஒப்பந்ததாரரின் நிரந்தர முகவரி | |
| 3 | ஒப்பந்ததாரரின் அஞ்சல் முகவரி | |
| 4 | தொலைபேசி எண் : | |
| 5 | பல்வேறு இடங்களுக்கு குறிப்பிடும் விலைபுள்ளி (இணைப்பில் உள்ளபடி டன் ஒன்றுக்கு விலை–அனைத்து செலவுகளும் உட்பட) | |
| 6 | முக்கிய குறிப்புக்கள் ஏதேனும் இருப்பின் | |

## உறுதி மொழி

என்னால் / எங்களால் மேலே குறிப்பிட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி கூறுகிறேன் / கூறுகிறோம் ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் / நடப்போம் என்று உறுதி கூறுகிறேன் / கூறுகிறோம். மேற்கண்ட ஒப்பந்தமானது உத்தரவு நாள் முதல் இரண்டு வருட காலத்திற்கு ஆகும். இவ்வொப்பந்தம் உறுதி செய்யப்படும் பட்சத்தில் ரூ.100/- விலை மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தத்தை ஒன்றியத்துடன் ஏற்படுத்திக் கொள்ள முழு சம்மதத்தை தெரிவித்துக்கொள்கிறேன் / கொள்கிறோம்.

விண்ணப்பதாரர் கையொப்பம்

இடம் :

நாள் :

**ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்.,**
**ஆவின் கால்நடைத்தீவன தொழிற்சாலை, சென்னிமலைரோடு, ஈரோடு *638 001***
தொலைபேசி எண்: 8883600102 e.mail: eroaavin.cfp@gmail.com

---

## வணிகபடிவம் – II

இரண்டு வருட காலத்திற்கு கால்நடைத்தீவன மூட்டைகளை தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட இடங்கள் மற்றும் ஈரோடு ஒன்றியத்தின் உறுப்புச் சங்கங்களுக்கு சொந்த/ வாடகை வாகனங்கள் மூலம் கொண்டு சென்று ஒப்படைப்பதற்கான வாகன வாடகை ஏற்றுக்கூலி மற்றும் இறக்குகூலி உட்பட அனைத்துச் செலவுகளும் சேர்த்து டன் ஒன்றுக்கு என்ற அடிப்படையில் குறிப்பிடப்படவேண்டும்.

| வ. எண் | மாவட்டம் மற்றும் விநியோக வழித்தடங்கள் | விலைப்புள்ளி டன் ஒன்றுக்கு (அனைத்தும் உட்பட) |
|---|---|---|
| 1 | **திருப்பூர் ஒன்றியம்**<br>முத்தூர்,வெள்ளகோவில், குடிமங்களம், ஊத்துக்குளி, மூலனூர் | |
| 2 | **கோவை ஒன்றியம்**<br>கோயமுத்தூர், ஆலந்தூர், கிணத்துக்கடவு | |
| 3 | **சேலம் ஒன்றியம்**<br>சேலம், காடையாம்பட்டி, மேச்சேரி, கொளத்தூர், ஆத்தூர், வெப்படிஇந்திராநகர், கிழக்குராஜபாளையம், வீரகாரனூர், தெற்குமனக்கடவு, பொன்னொளிநகர், V.மணியம்மன் நகர், P.அண்ணா நகர், பகடபாடி, பள்ளியம்பாளையம், எடப்பாடி, வைகுந்தம், நாட்டார் அக்ரஹாரம், சங்ககிரி, சங்ககிரி (R.S), கோனேரிப்பட்டி, வாழப்பாடி, மல்லியகரை, கடம்பூர், நரசிங்காபுரம், இளங்கோநகர், சின்னகரட்டூர், ஊத்துக்காடு, கோவிந்தம் பாளையம், கங்கவள்ளி, அனையம்பட்டி, முட்டல், ராமனுஜபுரம், அரனுத்துமலை, | |
| 4 | **நாமக்கல் ஒன்றியம்**<br>திருச்செங்கோடு, பல்லக்காபாளையம், குமாரமங்கலம், வையப்பமலை, இராசிபுரம் | |
| 5 | **தர்மபுரி ஒன்றியம்**<br>அரூர், தர்மபுரி | |
| 6 | **கிருஷ்ணகிரி ஒன்றியம்**<br>கிருஷ்ணகிரி | |
| 7 | **திருச்சி ஒன்றியம்**<br>**திருச்சி மாவட்டம்**<br>ஊனையூர், வந்தலை, கல்லகம், பைத்தம்பாறை, கிலியனூர்பட்டி, நங்கநல்லூர், கலிங்கமுதலியான்பட்டி, திண்ணனூர், பெட்டவாய்தலை | |

| | | |
|---|---|---|
| | **பெரம்பலூர் மாவட்டம்**<br>அரும்பாவூர், மேட்டுப்பாளையம், கோனேரி பாளையம், அய்யர் பாளையம், பசும்பலூர், வயலபாடி, ஓகலூர், தூங்காபுரம், சீராநத்தம், கீழபுலியூர், அன்னமங்களம், பாடாலூர், அடைக்கம்பட்டி, சிறுவயலூர், நாட்டார்மங்களம், கீழப்பழுவூர், | |
| | **அரியலூர் மாவட்டம்**<br>அரியலூர், செந்துறை, செயக்கொண்டம், இடைக்காடு, தூத்தூர், ஆண்டிமடம், திருமனூர் | |
| 8 | **திண்டுக்கல் ஒன்றியம்**<br>கொடைக்கானல், நிலக்கோட்டை (Via) பள்ளப்பட்டி, ஓட்டன்சத்திரம், பழனி, நத்தம் (Via) திண்டுக்கல் | |
| 9 | **விழுப்புரம் ஒன்றியம்**<br>திண்டிவணம் | |
| 10 | **வேலூர் ஒன்றியம்**<br>வேலூர், ஓமகுப்பம் | |
| 11 | **விருதுநகர் ஒன்றியம்**<br>ஸ்ரீவில்லிபுத்தூர், விருது நகர் | |
| 12 | **சிவகங்கை ஒன்றியம்**<br>சிவகங்கை | |
| 13 | **இராமநாதபுரம் ஒன்றியம்**<br>பரமக்குடி | |
| 14 | **கன்னியாகுமரி ஒன்றியம்**<br>நாகர்கோவில், கன்னியாகுமரி, மார்த்தாண்டம் | |
| 15 | **திருநெல்வேலிஒன்றியம்** திருநெல்வேலிபழையபால்பண்ணை, திருச்செந்தூர்ரோடு,பாளையங்கோட்டை, சங்கரன்கோவில், செங்கோட்டை, வள்ளியூர், களக்காடு, கோவில்பட்டி, அபிசேகப்பட்டி கால்நடைப்பண்ணை, சாத்தூர், சாத்தான்குளம், பாளையங்கோட்டை, தூத்துக்குடி | |
| 16 | **மதுரை ஒன்றியம்**<br>கோட்டநத்தம்பட்டி, தனியாமங்கலம், கொட்டக்குடி, தும்பைப்பட்டி, எம்.வெள்ளாளபட்டி, கோப்பம்பட்டி, எ.புதுப்பட்டி, கருமாத்தூர், எஸ்.எம். அம்மாபட்டி, மேலத்திருமாணிக்கம், பேரையூர், உத்தப்ப நாயக்கனூர், தொட்டப்பநாயக்கனூர், ஈச்சம்பட்டி, பெரியஇலந்தைகுளம் | |
| 17 | **தேனி ஒன்றியம்**<br>தேனி, பெரியகுளம், போடி நாயக்கனூர், தேவாரம், வாளயாத்துப்பட்டி, தாடிச்சேரி. எட்டப்பராஜபுரம், பாலசமுத்திரம், பாலகிருஷ்ணா புரம், வருசநாடு, வள்ளல்நதி, முருக்கோடை, பாலக்கோம்பை, கோம்பைதொழு, உத்தமபாளையம், பூதிப்புரம், பாண்டிச்சேரி | |
| 18 | **கடலூர் ஒன்றியம்**<br>மங்களம், மண்குளம், வடபதி | |
| 19 | **புதுகோட்டை ஒன்றியம்**<br>கில்லனூர், குளிபிறை, கிள்ளுகோட்டை, மேளூர், கரம்பக்குடி | |

# உறுதிமொழி

என்னால் / எங்களால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி கூறுகிறேன் / கூறுகிறோம். ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சட்ட திட்டங்கள் மற்றும் விதிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் / நடப்போம் என்று உறுதி கூறுகிறேன் / கூறுகிறோம். மேற்கண்ட ஒப்பந்தமானது உத்தரவு நாள் முதல் இரண்டு வருட காலத்திற்கு ஆகும். ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டவுடன் இவ்வொப்பந்தம் சம்பந்தமான விதிமுறைகள் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தை ஒன்றியத்துடன் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஏற்படுத்திக் கொள்ள முழு சம்மதத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன் / கொள்கிறோம். ஒன்றியத்திற்கு தேவைப்படும் நேரத்திற்கு உடன் லாரிகளை அனுப்பி சரக்குகள் போக்குவரத்தில் எந்தத இடையூறுகளுமின்றி வேலையினை முடித்து கொடுப்பேன் /கொடுப்போம் எனவும் உறுதி கூறுகிறேன் /கூறுகிறோம்.

விண்ணப்பதாரர் கையொப்பம்

இடம்: -----------

நாள் : -----------

## பொது நிபந்தனைகள்:-

1. நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தப்புள்ளி படிவத்தை அதற்கான கட்டணத்தொகையை பணவிடைத்தாளாக (Demand Draft ) செலுத்தி அனைத்து அலுவலக வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். மற்றும் www.tenders.tn.gov.in இணையதளம் மூலம் எவ்வித கட்டணமும் இன்றி இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. முன்வைப்புதொகைக்கான (EMD ) குறுக்குகோடிட்ட வரைவோலை "பொது மேலாளர், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., ஈரோடு" என்ற பெயரில் ஈரோட்டில் மாற்றத்தக்க பணவிடைத்தாளாக எடுக்கப்பட வேண்டும்.. ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கு தொகை, அஞ்சல் ஆணை மற்றும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வகையிலான அனைத்து அரசு / சட்டபூர்வ பதிவு ஆவணங்களின் நகல்களும் ஒப்பந்ததாரர் கையொப்பமிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்பந்தபுள்ளியுடன் (Technical Bid) இணைக்கப்படுதல் வேண்டும். சான்று ஆவணங்கள் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.
3. தீவனப்போக்குவரத்து ஒப்பந்த புள்ளிக்கான விண்ணப்பம் என எழுதி, டெக்னிக்கல் பிட் மற்றும் கமர்சியல் பிட் ஆகியவற்றை தனித்தனி கவர்களில் போட்டு எழுதி மூடி முத்திரையிட்டு பின் அவற்றை மேல் உறையில் இட்டு மூடி அரக்கு முத்திரையிட்டு சமர்ப்பிக்க வேண்டும்.
4. தபால் மூலமாகவோ, நேரிலோ காலதாமதமாக வரப்பெறும் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.
5. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் எதிர்பாராதவிதமாக விடுமுறை தினமாக அறிவிக்கப்படுமெனில் அடுத்து வரும் வேலை நாளில் மேற்குறிப்பிட்டுள்ள நேரங்களில் திறக்கப்படும்.
6. பகுதி-I டெக்னிகல் பிட் முழுவதும் பரிசீலிக்கப்பட்டு தகுதிவாய்ந்தவர்களின் பகுதி-II கமர்சியல்பிட் கவர்கள் திறக்கப்படும். மேலும் ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்களிடம் அன்றைய தினமே விலையேற்பு பேச்சுவார்த்தை நடத்தப்படும்.
7. ஒப்பந்தப்புள்ளிகளை நிராகரிக்கவோ, பிரித்து அளிக்கவோ, இரத்து செய்யவோ, ஏற்றுக்கொள்ளவோ, பொது மேலாளர், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (வரையறுக்கப்பட்டது), ஈரோடு அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. Tender forms can be downloaded free of cost from "www.tenders.tn.gov.in"

இடம் : ஈரோடு
நாள் : .2022

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்
ஆவின் கால்நடைத்தீவன தொழிற்சாலை, சென்னிமலைரோடு, ஈரோடு 638 001
தொலைபேசி எண் : 8883600104, 8883600106 e.mail: eroaavin.cfp@gmail.com

## கால்நடைத்தீவன போக்குவரத்து ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகள்

உற்பத்தியான தீவன மூட்டைகளை / பொருட்களை கால்நடைத்தீவன தொழிற்சாலையில் இருந்து லாரிகளின் மூலம் ஏற்றிச்சென்று வெளிமாவட்ட ஒன்றியங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு கால்நடைப்பண்ணைகளுக்கு கொண்டு சென்று ஒப்படைக்கும் பணிக்கான ஒப்பந்த விதிமுறைகள் பின்வருமாறு.

1. ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ரூ.15000/- +18% வரிகள் தனி

2.ஒப்பந்தப்புள்ளி படிவம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்ததாரா் கையொப்பம் இட வேண்டும். பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளி படிவம் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி விண்ணப்ப படிவம் சுய விலாசத்தோடு அஞ்சல் உறையின்மேல் எந்த ஒப்பந்தத்திற்கு என்ற விபரத்துடன் நன்கு மூடி முத்திரையிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

3.அ.ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற கடைசி நாள் : 30.05.2022 மாலை 5.45 மணி.
ஆ.பூர்த்தி செய்த படிவம் சமா்ப்பிக்க கடைசி நாள் : 31.05.2022 காலை 11.00 மணி.
இ.ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கும் நாள் மற்றும் நேரம் : 31.05.2022 காலை 11.30 மணி.

4.ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் ரூ.25,000/-க்கான (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) வரைவோலை முன்வைப்புத் தொகையாக (Earnest Money Deposit) பொது மேலாளா், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்.. என்ற பெயருக்கு ஈரோட்டில் மாற்றத்தக்க வங்கி பணவிடைத்தாளாக இணைக்கப்பட வேண்டும் முன்வைப்புத் தொகை இல்லாது வரும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஒன்றியத்தில் நிலுவையிலுள்ள எந்த ஒரு தொகையும் முன்வைப்புத் தொகைக்கு ஈடாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5.விண்ணப்ப படிவங்களை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ ஒன்றிய பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

6.ஒப்பந்த காலம் உத்தரவு நாள் முதல் இரண்டு வருட காலத்திற்கானதாகும்.

7.ஒப்பந்த காலத்தை ஒன்றியத்தின் நலன் கருதி நீட்டிக்கவோ, குறைக்கவோ அல்லது இரத்து செய்யவோ பொது மேலாளா் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

விண்ணப்பதாரா் கையொப்பம்

8.ஒப்பந்தம் சார்பாக எந்த ஒரு விசயத்திலும் ஒன்றிய பொது மேலாளர் அவர்கள் எடுக்கும் தீர்ப்பே முடிவானதாகும்.

9.ஒப்பந்தம் ஊர்ஜிதம் செய்யப்பட்டு ஒன்றியத்தால் உத்தரவு வழங்கப்பட்டு ஒப்பந்ததாரர் உத்தரவு பெற்றுக்கொண்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் ஒப்பந்ததாரர் ஒன்றியத்துடன் ரூ.100/-மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு ரூ.1,00,000/-க்கான (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) (Security Deposit) காப்புத்தொகையாக செலுத்தவேண்டும். தவறும் பட்சத்தில் உத்தரவு இரத்து செய்யப்பட்டு ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்ட முன் வைப்புத்தொகை (EMD) பறிமுதல் செய்யப்படும்.

10.ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள முன் வைப்புத்தொகை (EMD) மற்றும் காப்புத்தொகைக்கு (Security Deposit) எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. மேற்கூறிய காப்புத்தொகையில் (Security Deposit) 75சதவிகிதம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் முடிவுற்றவுடனும் மீதம் உள்ள 25 சதவிகித காப்புத்தொகை ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலத்திற்கு உரிய இறுதி தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்றவுடனும் திருப்பி அளிக்கப்படும். ஒப்பந்ததாரரால் ஒப்பந்த காலத்தில் ஏதேனும் இடர்பாடுகள் நேர்ந்து அதனால் ஒன்றியத்திற்கு இழப்பு ஏற்படும் பட்சத்தில் அதனை ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள காப்புத்தொகையில் (Security Deposit) பிடித்தம் செய்யப்படும்.

11.ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததாரர் ஒன்றிய நிபந்தனைகளில் ஏதேனும் ஒரு நிபந்தனையையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிபந்தனைகளையோ சரிவர கடைப்பிடிக்கவில்லை என்றால் இவ்வொப்பந்தத்தை எந்த நேரத்திலும் முடிவுக்கு கொண்டு வர பொது மேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. அவ்வாறு நிகழும் பட்சத்தில் ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள காப்புத்தொகை முழுவதும் பறிமுதல் செய்யப்படும். மேலும் ஒன்றியத்திற்கு ஏதேனும் இழப்போ, வேறு செலவினங்களோ ஏற்பட்டால் ஒப்பந்ததாரருக்கு ஒன்றியம் கொடுக்க வேண்டிய வாடகை பில் தொகையில் இருந்து பிடித்தம் செய்வதுடன் நிபந்தனைகளின்படி சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கவும் ஒன்றியத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

12.ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட விலையின் அடிப்படையில் ஒன்றியம் கோரும் நேரத்தில் தனது வாகனங்களை அனுப்ப வேண்டும்.

13.ஒப்பந்த உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர் கால்நடைத்தீவன தொழிற்சாலையில் இருந்து ஏற்றப்படும் கால்நடைத்தீவனத்தை உடனுக்குடன் நல்ல நிலையில் உரிய இடங்களுக்கு கொண்டு செல்ல கடமைபட்டவர் ஆவார். ஒப்பந்த காலத்தில் கால்நடைத்தீவனங்களை லாரிகள் மூலம் ஏற்றி சென்று வெளிமாவட்ட ஒன்றியங்கள், அரசு நிறுவனங்கள்,அரசு கால்நடைப்பண்ணைகளுக்கு ஒப்படைப்பு செய்யும் இடங்கள் (Delivery Point) அதிகபட்சம் 10 ஒப்படைப்பு இடங்கள் என்ற கணக்கில் அதிக பட்சம் 50கி.மீ தூரம் வரை சென்று ஒப்படைப்பு செய்ய வேண்டும். ஈரோடு ஒன்றியத்திற்கு அதிகபட்சம் இருபத்தைந்து (25) ஒப்படைப்பு இடங்கள் வரை விநியோகம் செய்தல் வேண்டும்.

14.ஒப்பந்ததாரரோடு எளிதாக தொடர்பு கொள்ளும் வகையில் ஈரோடு நகரில் அலுவலகமும் தொலைபேசி இணைப்பும் கொண்டவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் கையொப்பம்

15.ஒப்பந்ததாரரின் அலுவலக முகவரி மற்றும் தொலைபேசி எண்களில் மாறுதல் ஏற்பட்டால் ஒன்றியத்திற்கு எழுத்துமூலம் உடன் தெரிவிக்க வேண்டும்.

16.ஒன்றியத்திற்கு தேவைப்படும் லாரிகள் பற்றிய விபரம் ஒப்பந்ததாரருக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்படும். தொலைபேசி மூலம் பெறப்படும் தகவல்களை ஒப்பந்ததாரர் தனது பதிவேட்டில் பதிவு செய்து கொண்டு அன்றே லாரிகளை அனுப்பி வைக்க வேண்டும். ஒப்பந்ததாரரோ அல்லது அவரது பணியாளரோ தொலைபேசி மூலம் பெறப்படும் தகவல்களை பதிவு செய்ய தவறினால் அதற்கு ஒன்றியம் பொறுப்பல்ல.

17.ஒப்பந்ததாரர் சரக்கு ஏற்றுவதற்கு வண்டி அனுப்பும் பொழுது ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஏற்றப்படும் அளவு, அனுப்பப்படும் ஊர், வண்டியின் பதிவு எண்ஆகியவற்றோடு ஒன்றியத்திற்கு ஒரு வேண்டுதல் விண்ணப்பம் ஒப்பந்ததாரரின் ஒப்பத்துடன் அனுப்பி வைக்க வேண்டும்.

18.ஒன்றியத்திலிருந்து லாரிகளில் சரக்குகள் ஏற்றியவுடன் எடை போட்டு நல்லமுறையில் தார்பாய் போட்டு நன்றாக கட்டப்பட்ட பின்னர்தான் வெளியே செல்ல அனுமதிக்கப்படும்.

19.ஒப்பந்ததாரர் பொது மேலாளர் அவர்களோடு ஏற்படுத்தி இருக்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் உற்பத்திபொருட்களையும் மற்றும் பண்டக சாலையில் இருந்து அனுப்பப்படும் பொருட்களையும் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் கொண்டு செல்லவேண்டிய இடங்களுக்குக் கொண்டு செல்ல கடமைப்பட்டவர் ஆவார்.

20.சரக்கு ஏற்றிசெல்லும் வாகனம் நல்லநிலையில் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் பொருட்களை எடுத்துச் செல்லும் போது பொருட்களுக்குச் சேதம் ஏற்பட்டால் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

21.இவ்வொப்பந்தத்தை வேறு ஒருவருக்கு மாற்றவோ அல்லது துணை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவோ கூடாது.

22.ஒப்பந்ததாரர் அனுபவம் உள்ள ஓட்டுனருடன் கூடிய நல்ல நிலையில் உள்ள வாகனத்தையே பயன்படுத்தவேண்டும். ஒப்பந்ததாரர் தன் வாகனங்களுக்கு கட்டாயமாக விபத்துக்கான காப்பீடு மேற்கொண்டு முறைப்படி காப்பீட்டுத்தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு காப்பீட்டுத்தொகை செலுத்தப்படாமல் இருந்தால் அதனால் ஏற்படும் இழப்பிற்கு ஒப்பந்ததாரரே முழுப்பொறுப்பாவார்.

23.தொழிலாளர் நலச் சட்ட திட்டங்களுக்கும் மற்றும் இதர சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டு நடப்பது ஒப்பந்ததாரரின் முழு பொறுப்பாகும்.

24.சாலையின் வழியே பொருட்களை எடுத்துச்செல்லும்போது வாகனங்கள் பழுது பட்டாலோ அல்லது வேறு இடர்பாடுகளினாலோ தடைஏற்பட்டால் வேறு மாற்று வாகனங்கள் மூலம் சரக்கை உடனே கொண்டு சேர்க்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு ஆகும் செலவினை ஒப்பந்ததாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பதாரர் கையொப்பம்

25.மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ லாரிகள் அனுப்பக்கோரிய 24 மணி நேரத்திற்குள் ஒப்பந்ததாரர் லாரிகள் அனுப்ப வேண்டும். தகவல் பெற்ற 24 மணி நேரத்திற்குள் வாகனங்களை அனுப்பத் தவறிய ஒப்பந்ததாரரிடம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி வெளிச்சந்தையில் அல்லது இதர ஒப்பந்ததாரரிடம் இருந்து வாகனங்கள் பெறப்பட்டு தீவனம் அனுப்பப்பட்டால் டன் ஒன்றுக்கு ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) வீதம் அபராதம் விதிக்கப்படும். மேலும் அதனால் கூடுதல் செலவுகள் ஏற்பட்டால் அதனை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரரின் வாடகைப் பட்டியல் அல்லது காப்புத்தொகையில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

26.ஒப்பந்ததாரரின் வாகனம் விபத்துக்குள்ளாகும்போது உடனடியாக விபத்து நேர்ந்தது பற்றி ஒன்றியத்திற்கு தகவல் தெரிவிக்கவேண்டும். அதனால் ஏற்படும் இழப்பிற்கு ஒன்றியம் பொறுப்பேற்காது.

27.இவ்வொப்பந்தத்தை ஒப்பந்ததாரர் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ நிறைவேற்றாத பட்சத்தில் ஒன்றியத்திற்கு இழப்பு நேரிடின் அவர் செலுத்தி உள்ள காப்பு தொகை மற்றும் அவருக்கு சேரவேண்டிய வாடகை பட்டியல் தொகை ஆகியவற்றில் நேர்செய்யப்படும்.

28. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி ஒன்றியத்திலிருந்து ஏற்றிச் செல்லும் சரக்குகளை உரிய நேரத்தில் உரிய இடங்களுக்கு கொண்டு செல்லாமல் தாமதம் ஏற்பட்டு சரக்குத் தரம் கெடுமேயானால் அதனால் ஏற்படும் இழப்புத் தொகை அனைத்திற்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

29. ஒப்பந்ததாரர் ஒப்பந்த அடிப்படையில் பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள் சரக்கு போக்குவரத்து வாகன விதிகள் மற்றும் சாலை விதிகளுக்குட்பட்டு செல்லவேண்டும். தவறும் பட்சத்தில் பொருட்களுக்கு ஏதேனும் இழப்போ அல்லது இடர்பாடுகள் ஏற்படின் அனைத்திற்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். மேலும் விதிகளை பின்பற்றாமல் உண்டாகும் இழப்புகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

30.ஒப்பந்ததாரர் ஒப்பந்த அடிப்படையில் வெளி லாரிகளில் பொருட்களை எடுத்துச் செல்லும் போது ஏதேனும் இழப்பு ஏற்படின் ஒப்பந்ததாரர் பொறுப்பேற்க வேண்டும்.

31.ஒப்பந்ததாரர் ஒப்பந்த அடிப்படையில் பொருட்களை ஒன்றியம் அனுப்பிய இடங்களுக்கோ, பிற மாவட்ட ஒன்றியங்களுக்கோ எடுத்துச்செல்லும் போது பொருட்களின் எடைகளில் குறைபாடோ அல்லது சேதமோ ஏற்பட்டால் ஒப்பந்ததாரரே பொறுப்பேற்க வேண்டும்.

32. ஏற்று கூலி மற்றும் இறக்குகூலி இடத்திற்கு இடம் மாறுதல் ஏற்படும்போது அதை ஒப்பந்ததாரர் பொறுப்பிலேயே ஏற்றுக்கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் ஒன்றியம் பொறுப்பேற்காது.

விண்ணப்பதாரர் கையொப்பம்

33.ஒப்பந்ததாரர் சரக்குகளை ஒப்படைக்க வேண்டிய இடங்களில் அனுப்பப்பட்ட முழுச் சரக்கையும் சேர்த்தபின்னர் ஒப்பந்ததாரருக்கு போக்குவரத்து கட்டணம் வழங்கப்படும். சரக்கு இறக்கியதற்கான அத்தாட்சியை அனுப்புகை குறிப்புத்தாளில் பெற்று அதனை போக்குவரத்துக்கு உண்டான வாடகை பட்டியலுடன் இணைத்தனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனத்தில் ஒன்றிய பணியாளர் எவரும் அனுப்பபடமாட்டார்கள். ஒப்பந்தாரரே தனது சொந்த பொறுப்பில் தீவன மூட்டைகளை இறக்கியபின் அதற்கான அத்தாட்சியை அனுப்புகை குறிப்புதாளில் பெற்றுவர வேண்டும்.

34.ஒப்பந்ததாரர் மாதத்தின் முதல் 15 தினங்களுக்கான வாடகைப்பட்டியலை அந்த மாதம் 20ம் தேதிக்குள்ளும் இரண்டாவது 15 தினங்களுக்கான வாடகைப்பட்டியலை அடுத்தமாதம் 5ம் தேதிக்குள்ளும் ஒன்றியத்திற்கு அனுப்ப வேண்டும். தவறும் பட்சத்தில் பட்டியலை நேர்செய்யப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கு ஒன்றியம் பொறுப்பேற்காது. போக்குவரத்துக் கட்டணத்தொகை RTGS/NEFT/கீறலிட்ட காசோலை மூலமாக வழங்கப்படும்.

35.வேலை நிறுத்தம் மற்றும் பந்த் போன்றவைகள் நடைபெறும் நேரங்களில் ஒப்பந்ததாரர் தங்களது பணியினை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ செய்ய இயலாதபோது ஒப்பந்ததாரர்களுக்கு எவ்வித நஷ்ட ஈட்டுத் தொகையும் வழங்கப்பட மாட்டாது.

36.பொது மேலாளர் அவர்கள் ஒரு மாத கால முன்னறிவிப்பு கொடுத்து ஒப்பந்தாரர் ஒப்பந்தத்தை ரத்து செய்ய பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு. அவ்வாறு ஒப்பந்தத்தை ரத்து செய்தால் ஒப்பந்ததாரர் ஒன்றியத்திடம் எவ்வித நஷ்ட ஈட்டுத் தொகையும் கோர உரிமையில்லை.

37.ஒப்பந்ததாரர் ஏற்படுத்தியிருக்கும் ஒப்பந்தத்தில் மாறுதல் ஏதேனும் செய்ய நேர்ந்தால் ஒன்றிய நிர்வாகக் குழுவின் முடிவே இறுதியானதாகும்.

38. தீவன போக்குவரத்து ஒப்பந்ததாரர்கள் பெரும்பாலும் போக்கு லாரிகளையே பயன்படுத்துவதால் தீவன போக்குவரத்து ஒப்பந்தத்தில் ஊர்ஜிதம் செய்யப்பட்ட தொகைக்கு ஒரு வழிப்பாதைக்கு மட்டும் ஒப்பந்தகாலம் முடியும் வரை அரசு அறிவிக்கும் டீசல் விலை உயர்வு / குறைவிற்கு ஏற்ப பால் சேகர வாகனங்களுக்கு வழங்கப்படும் விலையின் அடிப்படையில் திருத்தி வழங்கப்படும். பிற வேறு காரணங்களுக்கு விலை உயர்வு வழங்கப்பட மாட்டாது.

39. ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் ரூ.100.00(ரூபாய் நூறு மட்டும்) செலுத்தி இணை உறுப்பினர் ஆக வேண்டும். இவ்வொப்பந்தத்தில் ஏதேனும் வில்லங்கங்கள் ஏற்படின் சட்டரீதியான நடவடிக்கைகள் ஈரோடு துணைபதிவாளர் (பால்பதம்) நீதி மன்றத்திற்கு உட்பட்டதாகும்.

விண்ணப்பதாரர் கையொப்பம்

40. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் குறைந்தபட்சம் இரண்டு லாரிகளுக்கு உரிமையாளராக இருத்தல் வேண்டும். அல்லது அவர்கள் கட்டுப்பாட்டில் இரண்டு லாரிகள் வைத்திருக்க வேண்டும். மேலும் அதற்குண்டான வாகன உரிமம் (R.C.Book) மற்றும் இதர ஆவணங்களின் நகல்கள் ஒப்பந்தப்புள்ளி படிவத்தோடு இணைக்கப்படவேண்டும். மேலும் ஈரோடு ஒன்றியத்திற்கு தீவனப் போக்குவரத்து ஒப்பந்தம் பெறும் ஒப்பந்ததாரர்கள் தினமும் குறைந்தபட்சம் 4 லாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும். தேவைப்படின் கூடுதலாக ஓரிரு லாரிகள் ஏற்பாடு செய்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் தீவனப்போக்குவரத்திற்கு ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிசந்தையிலிருந்து அல்லது இதர ஒப்பந்ததாரரிடமிருந்து வாகனங்கள் பெறப்பட்டு தீவனம் அனுப்பப்படும்.

41. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் இதர ஒன்றியங்களிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களிலோ குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் போக்குவரத்து ஒப்பந்தப்பணியில் முன் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். அதற்கான சான்றிதழ்கள் ஒப்பந்தப்புள்ளி படிவத்தோடு இணைக்கப்படவேண்டும்.

42. ஒப்பந்ததாரர் தன்னுடய வாகன ஓட்டுநருக்கு **E.P.F** செலுத்திய இரசீது வழங்கிய பின்னரே கடன் பட்டியலுக்கான தொகை வழங்கப்படும்.

43. ஒப்பந்ததாரர்களின் கடன் பட்டியலுக்கு வருமான வரி சட்டம் 1961ன் படி நடைமுறையில் உள்ள **TDS** பிடித்தம் செய்யப்பட்டு கடன் பட்டியலுக்கான தொகை வழங்கப்படும்.

விண்ணப்பதாரர் கையொப்பம்